# தடம்புரண்ட திரைக்கதை!

## ‘தினமணி’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

எதிர்பாராமல் நிகழ்ந்த விபத்து என்று கடந்து போக முடியவில்லை. முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டும்கூட இப்படியொரு துயரம் நிகழ்ந்திருக்கிறது என்றால் அதற்குக் காவல் துறையையோ, அரசையோ குற்றம்சாட்டுவதில் அர்த்தமில்லை. காவல் துறையின் விதிமுறை களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த போது பின் விளைவுகளை உணர்ந்து உயர்நீதி மன்றம் எச்சரித்திருக்கிறது எனும் போது, அதன் முழுப் பொறுப்பும் நடிகர் (தலைவர்) விஜய்யைத்தான் சாரும்.

சில மணி நேரத்துக்கு முன்பு நாமக்கல்லில் எந்த முகூர்த்தத்தில் ‘தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் மக்களின் பாதுகாப்பில் அக்கறை இல்லை’ என்று விஜய் பேசினாரோ தெரியவில்லை. கரூரில் அவரே அந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கிறார்; 40 அப்பாவிகளின் உயிரிழப்புக்கும் காரணமாகி இருக்கிறார். உயிரிழப்பின் அனுதாபத்தை விஞ்சுகிறது துயரத்துக்குக் காரணமானவர்கள் மீதான ஆத்திரம்.


நாமக்கல் கூட்டத்திலேயே பிரச்சினை தொடங்கி இருக்கிறது. சனிக்கிழமை காலை 9 மணிக்கே ஆரம்பிக்க வேண்டிய பிரசாரத்துக்காக ரசிகர்களும் தொண்டர்களும், பொதுமக்களும் அதிகாலையிலிருந்து காத்திருந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 8 மணி நேரம் அவர்களைக் காக்க வைத்தபிறகு, கொளுத்தும் வெயிலில் பிற்பகல் 2.30 மணி அளவில்தான் தனது பிரச்சாரத்தைத் தொடங்கி இருக்கிறார் நடிகர் (தலைவர்) விஜய்.

தனக்காக மக்கள் பெருமளவில் காத்திருந்தார்கள் என்கிற தோற்றத்தை ஏற்படுத்த அவர் முன்னெடுத்த உத்தியால், பலர் மயக்கமடைந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 15 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அப்போதே விஜய்யும், ஏனைய நிர்வாகிகளும் விழித்துக் கொண்டு அடுத்தகட்ட பிரச்சாரமான கரூரில் முன்னேற்பாடு களைச் செய்திருக்க வேண்டும்.

கரூரில்கூட மதியம் வந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நடிகர் (தலைவர்) விஜய் இரவு 7.40 மணிக்குத்தான் வந்திருக்கிறார். கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்ததும், அருகிலிருந்த மரங்கள், கட்டடங்களில் பலர் ஏறி நின்றதும் கடும் நெருக்கடி களை ஏற்கெனவே ஏற்படுத்தி இருந்தது. மரங்களின் கிளைகள் முறிந்து விழுந்திருக்கின்றன,

தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் பெண்கள், குழந்தைகளால் நெரிசலைத் தாக்குப்பிடிக்க முடியாததில் வியப்பில்லை. தண்ணீர் வேண்டும் என்று கேட்ட ரசிகர்களுக்கு நடிகர் (தலைவர்) விஜய் தண்ணீர் பாட்டில்களை எடுத்து நாய்க்கு ரொட்டித் துண்டு போடுவதுபோல வீச, அதைப் பிடிக்க ரசிகர்கள் முண்டி யடித்தது விபரீதத் துக்குப் போடப்பட்ட அச்சாரம்.

**திருச்சியிலும், நாகப்பட்டினத்திலும் எதிர்கொண்ட பிரச்சினைகளின் பின்புலத்தில் தனது அடுத்தடுத்த பிரச்சாரக் கூட்டங்களை விஜய் திட்டமிடத் தவறினார். கேமரா வெளிச்சத்திலும் விளம்பர வெளிச்சத்திலும் தனது குழந்தைப் பருவம் தொடங்கி வளர்ந்த விஜய்க்கு நடைமுறை எதார்த்தமும், அரசியல் அனுபவமும் இல்லாததன் விளைவுதான் பல அப்பாவிகளின் உயிரிழப்புக்குக் காரணமாகி இருக்கிறது.**


தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
திங்கள்கிழமை 29-9-2025
விசுவாவசு புரட்டாசி 13 ஹிஜ்ரி 1447 ரபீவுல் ஆகிர் 5

தடம்புரண்ட திரைக்கதை!

எதிர்பாராமல் நிகழ்ந்த விபத்து என்று கடந்து போக முடியவில்லை. முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டும்கூட இப்படியொரு துயரம் நிகழ்ந்திருக்கிறது என்றால் அதற்குக் காவல் துறையையோ, அரசையோ குற்றம்சாட்டுவதில் அர்த்தமில்லை. காவல் துறையின் விதிமுறைகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த போது பின்விளைவுகளை உணர்ந்து உயர்நீதிமன்றம் எச்சரித்திருக்கிறது எனும்போது, அதன் முழுப் பொறுப்பும் நடிகர் (தலைவர்) விஜய்யைத்தான் சாரும்.

சில மணி நேரத்துக்கு முன்பு நாமக்கல்லில் எந்த முகூர்த்தத்தில் ‘திமுகவுக்கும், அதிமுகவுக்கும் மக்களின் பாதுகாப்பில் அக்கறை இல்லை’ என்று விஜய் பேசினாரோ தெரியவில்லை, கரூரில் அவரே அந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கிறார்; 40 அப்பாவிகளின்உயிரிழப்புக்கும் காரணமாகி இருக்கிறார். உயிரிழப்பின் அனுதாபத்தை விஞ்சுகிறது, துயரத்துக்குக் காரணமானவர்கள் மீதான ஆத்திரம்.

நாமக்கல் கூட்டத்திலேயே பிரச்னை தொடங்கி இருக்கிறது. சனிக்கிழமை காலை 9 மணிக்கே ஆரம்பிக்க வேண்டிய பிரசாரத்துக்காக ரசிகர்களும் தொண்டர்களும், பொதுமக்களும் அதிகாலையிலிருந்து காத்திருந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 8 மணி நேரம் அவர்களைக் காக்க வைத்தபிறகு, கொளுத்தும் வெயிலில் பிற்பகல் 2.30 மணி அளவில்தான் தனது பிரசாரத்தைத் தொடங்கி இருக்கிறார் நடிகர் (தலைவர்) விஜய்.

தனக்காக மக்கள் பெருமளவில் காத்திருந்தார்கள் என்கிற தோற்றத்தை ஏற்படுத்த அவர் முன்னெடுத்த உத்தியால், பலர் மயக்கமடைந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 15 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அப்போதே விஜய்யும், ஏனைய நிர்வாகி

எம்.ஜி.ஆருக்காக மணிக்கணக்காக அல்ல, நாள்கணக்காக மக்கள் இரவும், பகலும் காத்திருந்திருக்கிறார்கள். அப்போது இதுபோல் எந்தவொரு பெரிய விபத்தும் ஏற்படவில்லை. அதற்குக் காரணம், அவர் சார்ந்த கட்சி அமைப்பு ரீதியாக வலுவாக இருந்தது. கிராமங்கள் வரையில் அரசியல் அனுபவம் உள்ள கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி, பிரச்சாரத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து, வாக்குகளாக மாற்றும் வித்தையை கற்றுத் தேர்ந்திருந்தார்கள்.

**விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அவரது திரைப்பட செல்வாக்கை மட்டுமே நம்பித் தொடங்கப்பட்டிருக்கும் அரசியல் அமைப்பு: “விஜய்க்கு ஐடியாவும் இல்லை, ஐடியாலஜியும் இல்லை” என்று ஏனைய அரசியல் கட்சியினர் விமர்சிப்பதில் உண்மை இருக்கிறது. கார்ப்பரேட் பாணியில் பல கோடி ரூபாய் செலவழித்துத் திரைப்படங்களை விளம்பரப்படுத்தி வெற்றி அடைவது போல, அரசியல் வியாபாரமும் நடத்தலாம் என்று அவர் முனைந்ததன் விளைவுதான் கரூரில் அரங்கேறியிருக்கும், தமிழகத்துக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தியிருக்கும் நெரிசல் உயிரிழப்புகள்.**

இந்தியாவுக்குக் கூட்ட நெரிசலும் உயிரிழப்புகளும் புதிதல்லதான். இதுவரையில் திருவிழாக்களிலும், விளையாட்டுப்போட்டிகளிலும், விபத்துகளிலும் அவ்வப்போது ஓரிரு திரைப்பட வெளியீட்டு நிகழ்வுகளிலும்தான் விபத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. அரசியல் பொதுக் கூட்டங்களில் அரிதாகவே நெரிசல் மரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

**தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின்படி, 1996-க்கும் 2002-க்கும் இடையே இந்தியாவில் 3,935 நெரிசல் சம்பவங்களில் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் அரசியல் பிரச்சாரத்தில் 41 பேர் உயிரிழந்திருப்பது நடிகர் விஜய்யின் பிரச்சாரத்தில்தான். இதையும் கூட அவரது ரசிகர்கள் சாதனையாகக் கருத மாட்டார்கள் என்று நம்புவோம்.**

**உயர்நீதிமன்றத்தில் த.வெ.க. தாக்கல் செய்த மனுவின் மீதான தீர்ப்பில், நீதிபதி எஸ்.சதீஷ்குமார் எழுப்பிய நியாயமான கேள்விகளுக்கு இப்போது நடிகர் (தலைவர்) விஜய் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். “பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்துக்கு உள்பட்டுத்தான் நடத்த வேண்டும். தலைவர்கள்தான் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அசம்பாவிதம் ஏற்பட்டால் யார் பொறுப்பேற்பது?” உள்ளிட்ட நீதிபதியின் கேள்விகள் நடிகர் (தலைவர்) விஜய்யை இப்போது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருக்கிறது.**

ஆளும்கட்சியும், அரசும், காவல் துறையும் அனுமதி மறுத்தால் அதைத் தனக்கு எதிரான அரசியல் சதி என்று கூறி நடிகர் (தலைவர்) விஜய் அனுதாபம் தேட விழைந்தார். அனுமதி வழங்கினாலோ, கட்டுப்படுத்த முடியாத கூட்டத்தைக்கூட்டி இதுபோன்ற அசம்பாவிதங்களுக்கு வழிகோலுகிறார். பெரிய கூட்டத்தைக் கூட்டி தனது செல்வாக்கை நிலைநாட்டும் விஜய்யின் அரசியல் உத்திக்கு அப்பாவிகள் பலர் பலியாகும் பரிதாபத்தை என்னவென்று சொல்ல? ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் கேட்டுப் பெற்ற சிறப்புப் பாதுகாப்பு போதாதென்று, தனக்கெனத் தனியாக பாதுகாப்புப் படையையும் வைத்துக் கொண்டு தனது பாதுகாப்பில் கவனமாக இருக்கும், புதிதாக அரசியல் களம் காணும் அந்த நடிகருக்கு (தலைவருக்கு) தனது ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் தனக்கு வழங்கியிருப்பதுபோலப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்கிற அக்கறை ஏன் இல்லாமல் போனது?

கூட்டத்தைக் கூட்டுபவர்கள் மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கடமைப்பட்டவர்கள். ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலான பேரணிகளையும், பொதுக்கூட்டங்களையும் தடை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. நடிகர் (தலைவர்) விஜய்யின் ஒரு திரைப்பட நடிப்புக்கான ஊதியம் ரூ.100 கோடிக்கு மேல் என்கிறார்கள். ஆனால், அவருக்காக உயிரிழந்தவர்களின் உயிருக்கு அவர் நிர்ணயித்திருக்கும் விலை வெறும் தலா ரூ.20 லட்சம் மட்டுமே...

**சிலப்பதிகாரத்தின் பாயிர வரிகள் நடிகர் (தலைவர்) விஜய்க்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை - அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்!**

நன்றி : ‘தினமணி’
29.9.2025

### நாய்க்கு ரொட்டித்துண்டு போடுவதுபோல தண்ணீர் பாட்டில்களை வீசினார்!

**தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் பெண்கள், குழந்தைகளால் நெரிசலைத் தாக்குப்பிடிக்க முடியாததில் வியப்பில்லை. தண்ணீர் வேண்டும் என்று கேட்ட ரசிகர்களுக்கு நடிகர் (தலைவர்) விஜய் தண்ணீர் பாட்டில்களை எடுத்து நாய்க்கு ரொட்டித் துண்டு போடுவதுபோல வீச, அதைப் பிடிக்க ரசிகர்கள் முண்டியடித்தது விபரீதத்துக்குப் போடப்பட்ட அச்சாரம்.**

### அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்!

## பீகார் மாநில இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியாகிறது!

பாட்னா, செப். 30-

பீகார் மாநில இறுதி வாக்காளர் பட்டியலை இன்று தேர்தல் ஆணையம் வெளியிடுகிறது.

பீகார் மாநிலத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தபணிகள்காரணமாக, 65 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். இதனை எதிர்த்து காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்செய்தனர். மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், ஆதார் அட்டையை, ஒரு ஆவணமாகபெறவேண்டும் எனதேர்தல்ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

அதன்படி, வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க 12 வது ஆவணமாக ஆதார் சேர்க்கப்பட்டது. இந்தநிலையில்பீகார்மாநில இறுதிவாக்காளர்பட்டியல் இன்று வெளியாக உள்ளது. பட்டியல் வெளியான பிறகே, எத்தனை பேர் மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப் பட்டனர்.

நீக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பது தெரியவரும். இறுதி வாக்காளர் பட்டியலில் குளறுபடி இருந்தால், அதனை ரத்துசெய்து உத்தரவிடப்படும் என்று உச்சநீதிமன்றம் கடந்த முறை விசாரணையின் போது எச்சரித்திருந்தது.

மேலும், வாக்காளர் பட்டியல் வழக்கு வரும் அக்டோபர் 7ஆம் தேதி மீண்டும்விசாரணைக்குவர உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆண்டிபட்டி ஒன்றியத்தில்

## பள்ளி வகுப்பறை, ரேசன் கடை, நூலகம், அங்கன்வாடி கட்டிடங்கள்!

### மகாராஜன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

தேனி, செப். 30,

தேனிதெற்கு மாவட்டம், ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் நேற்று பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ – மாணவிகளின் பயன்பாட்டிற்காக புதிய கட்டிடங்கள் திறப்பு விழா சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது.

ராஜதானி ஊராட்சியில் டி.அழகாபுரி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைக்கு ஏற்ப ரூ.33 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு நேற்று எம்.எல்.ஏ. மகாராஜன் வகுப்பறை கட்டிடங்களை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இதேபோல் ஜக்கம்மாள்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் கட்டப்பட்ட ரூ.12 லட்சம் மதிப்பிலான ரேஷன் கடையை எம்.எல்.ஏ. மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மேலும் பொது மக்களுக்கு ரேஷன் பொருட்களான அரிசி, சீனி உள்ளிட்டவைகளை வழங்கி விற்பனையை தொடங்கி வைத்தார். கொத்தப்பட்டி கிராமத்தில் பள்ளிக் கல்வி பொது நூலகங்கள் சிறப்பு உதவி திட்டத்தில் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் பொது நூலகம் கட்டிடத்தை துவக்கி வைத்தார்.

இதேபோல் கோத்தலூத்து கிராமத்தில் ரூ.17.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை எம்.எல்.ஏ. மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் , பேரூர் செயலாளர் , மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரகாஷ், மற்றும் ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், அய்யப்பன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயக்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### காஸ் அடுப்பை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று

## மக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம்!

சென்னை, செப். 29–

‘பழைய சமையல் அடுப்பை புதியதாக மாற் றுங்கள், சமையல் காஸ் (எல்பிஜி) கசிவை தவிர்த்து பாதுகாப்பாக இருங்கள்’ என்ற முழக் கத்துடன் சமையல் காஸ் மற்றும் அடுப்பு பயன் பாடு குறித்து சென்னை யில் பொதுமக்களிடம் நேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்தியன் ஆயில் கார்ப் பரேஷனும் சென்னை தேனாம்பேட்டை ஸ்ரீஜெயம் இண்டேன் கேஸ் ஏஜன்சியும் இணைந்து நடத்திய இந்த விழிப் புணர்வு நிகழ்ச்சியில் பல்வேறு தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன.

அதில், சமையல் அடுப்பு வாங்கி 5 ஆண்டுகள் ஆகிவிட்டால் அதில் இருந்து காஸ் கசியும் அபாயம் உள்ளது. அதனால் 5 ஆண்டுகள் ஆன அடுப்பை மாற்ற வேண்டும். சிலிண்டரை செங்குத்தாக வைக்க வேண்டும். அடுப்பு சிலிண்டரில் இருந்து குறைந்தது 6 அங்குலம் உயரத்தில் நிலையான தளத்தில் இருக்க வேண்டும். சமையலறையில் அடுப்பை தவிர தீப்பற்றக்கூடிய எதையும் வைக்க வேண்டாம். தீக்குச்சியை முதலில் பற்ற வைத்துவிட்டு அடுப்பு பர்னர் குமிழை திருக வேண்டும். உபயோகத்துக்கு பிறகு அடுப்பு மற்றும் ரெகுலேட்டர் குமிழ்களை மூட வேண்டும். காஸ் இணைப்பு குழாயை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றவேண்டும். சமையல் காஸ் தொடர்பான குறை களுக்கு 1906 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொண்டு நிவாரணம் பெற லாம் என்ற விவரங்கள் இடம்பெற்றிருந்தன.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

## “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

### இன்று 10 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, செப்.30-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் இன்று (30.09.2025) மணலி மண்டலம் (மண்டலம்-2), வார்டு-21ல் பாடசாலை தெருவில் உள்ள ஜெயம் மஹால், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-41ல் கொடுங்கையூர், மணலி சர்வீஸ் சாலை, மேம்பாலம் அடிவாரத்தில் உள்ள தொப்பை விநாயகர் கோயில், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-53ல் வால்டாக்ஸ் சாலை, கொண்டித்தோப்பு காவலர் குடியிருப்பில் உள்ள சமுதாயக் கூடம், திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-68ல் பெரியார் நகரில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபம், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-106ல் அரும்பாக்கம், ரசாக் தோட்டம் பிரதான சாலையில் உள்ள முரளி கிருஷ்ணா திருமண மண்டபம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-120ல் இராயப்பேட்டை, லாயிட்ஸ் காலனியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஐ.டி.ஐ. கல்லூரி, கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10) வார்டு-136ல் சாலிகிராமம், தாய் சத்யா மெட்ரிகுலேஷன் பள்ளி மைதானம், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11), வார்டு-153ல் போரூர், உதயா நகரில் உள்ள பி.ஜே.என் திருமண மண்டபம், அடையாறு மண்டலம் (மண்டலம்-13), வார்டு-176ல் வேளச்சேரி, ராம் நகர் 7வது பிரதான சாலையில் உள்ள காமராஜர் மாளிகை, பெருங்குடி மண்டலம் (மண்டலம்-14), வார்டு-191ல் ஜல்லடியன்பேட்டை, பாரதியார் சாலையில் உள்ள ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 134–வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.9.2025) சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.